# ஊடக அறிவிப்பு

2008-07-08

Visit our web site
www.tisrilanka.org

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of integrity

28/1, Bullers Lane, Colombo 07
Tel/Fax: 0112-501474, 0112-592287
Email: tisl@sltnet.lk
Web: http://www.tisrilanka.org

**பாராளுமன்ற நிதிக் கண்காணிப்புக் குழுக்களைத் தாமதமின்றி நியமிக்கும்படி ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றது**

அண்மைக் காலத்தில் ஜனாதிபதியினால் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதுடன் செயலிழந்த பொது முயற்சிகள் பற்றிய குழு (COPE), அரச கணக்குகள் குழு (PAC) ஆகிய நிதிக் குழுக்களை மீண்டும் நியமிப்பதற்கான அவசிய நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப் படாதிருப்பது ஏன் என ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் அரசாங்கத்திடம் வினவுகின்றது.

நிதிக் கண்காணிப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, மேலும் தாமதப்படுத்தாமல் குறித்த நிதிக் குழுக்களை நியமிப்பது, பொது மக்கள் பணத்தின் காப்பாளரான பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் வலியுறுத்துகின்றது.

உலகளாவிய நல்லாட்சிப் பிரயோகங்களின் படி பயனுறுதிவாய்ந்த நிதிக் குழுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான சுதந்திரமான ஒரு சூழலை உறுதிப்படுத்துவது பாராளுமன்றத்தின் பொறுப்பாகும். அரசாங்கத்தின் நிறைவேற்றுத் துறையினராகக் கருதப்படும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் கண்காணிப்புக் குழுக்களில் இயங்கக்கூடாது என்பதும் நல்லாட்சியின் முக்கிய சித்தாந்தமாகக் கருதப்படுகின்றது. பொது உடன்பாடொன்றாக வளர்ச்சியடைந்துள்ள மற்றுமொரு சித்தாந்தம் யாதெனில், எதிர்க் கட்சியின் சுயாதீனமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இக் கண்காணிப்புக் குழுக்களின் தலைமைப் பதவிகளை வகிக்க வேண்டும் என்பதாகும். பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் ஒத்திவைக்கப்பட்டவுடன், COPE, PAC அடங்கலான சகல குழுக்களும் இல்லாதொழிக்கப்பட்டதுடன், தற்போது அச்சகல குழுக்களும் இயக்கப்பாடற்றுக் கிடக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் காலத்திற்குக் காலம் கட்சி மாறும் இன்றைய அரசியல் சூழ்நிலையில், பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் (அவரைச் சார்ந்த கட்சி எதுவாக இருப்பினும்) இக் குழுக்களை முன்னெடுத்துச் செல்வது மிகப் பொருத்தமானது என ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் கருதுகின்றது.

ஆதலால், மேலும் தாமதப்படுத்தாமல் இக் குழுக்களுக்குப் பொருத்தமான உறுப்பினர்களை நியமிக்கும்படி ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் அரசாங்கத்திற்கும் பராளுமன்றத்திற்கும் அழுத்தம் கொடுக்கின்றது.